


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.2.2026) சென்னை, தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்திற்கு நேரில் சென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தகைசால் தமிழர் மறைந்த தோழர் ஆர். நல்லகண்ணு அவர்களின் உடலுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் அளிக்கப்பட்ட முழு அரசு மரியாதை நிகழ்வில் கலந்துகொண்டார். இந்நிகழ்வின்போது, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, அமைச்சர் எ.வ.வேலு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு. வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் நிறுவனத் தலைவர் தனியரசு, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா, இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சார்ந்த நிருவாகிகள் உடனிருந்தனர்.

## இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.175.23 கோடி மதிப்பில்

# 22 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் - ரூ.215.79 கோடி மதிப்பிலான 65 முடிவுற்ற பணிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப்.27-**

**இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.175.23 கோடி மதிப்பீட்டிலான 22 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.215.79 கோடி செலவிலான 65 முடிவுற்ற பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.02.2026) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 175 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16 திருக்கோயில்களில் 22 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 215 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் 21 திருக்கோயில்களில் 53 முடிவுற்ற திருப்பணிகள், இணை ஆணையர், உதவி ஆணையர் மற்றும் 10 ஆய்வர் அலுவலகக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தனது கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்குகள் நடத்துதல், பழமையான திருக்கோயில்களை அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து பாதுகாத்தல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், சட்டமன்ற மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

**16 திருக்கோயில்களில் 22 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல் :**

திண்டுக்கல் மாவட்டம், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கந்தன் இல்லம், கடம்பன் இல்லம் மற்றும் இடும்பன் குடில் ஆகிய புதிய தங்கும் விடுதிகள் கட்டுதல் மற்றும் திருக்கோயில் வடக்கு கிரிவீதியில் வரிசை மண்டபம் கட்டும் பணிகள்; தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயிலின் கடற்கரை பரப்பில் ஏற்படும் கடல் அரிப்பை தடுக்கும் பொருட்டு மூழ்கிய கடல்சார் அலை தடுப்பு சுவர் மற்றும் தூண்டில் வளைவு அமைக்கும் பணி; திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 29.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தற்போதுள்ள மலைப்பாதையை ஒட்டி புதிய மலைப்பாதை அமைக்கும் பணி;

திருச்சி மாவட்டம். சமயபுரம், மாரியம்மன் திருக்கோயிலில் பக்தர்களின் பயன்பாட்டிற்காக 15.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கொள்ளிடம் ஆற்றிலிருந்து நாள்தோறும் 10 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொண்டு வரும் பணி; தென்காசி மாவட்டம், குற்றாலம், திருக்குற்றாலநாத சுவாமி திருக்கோயிலில் 9.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; ஈரோடு மாவட்டம், தலையநல்லூர், பொன்காளியம்மன் திருக்கோயிலில் 7.05 கோடி மதிப்பீட்டில் ஐந்து நிலை இராஜகோபுரம் மற்றும் புதிய நிறுத்த மண்டபம் கட்டும பணிகள்; கோவை மாவட்டம், தேக்கம்பட்டி, வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் 5.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகாமண்டபம், வசந்த மண்டபம் மற்றும் ஆற்றங்கரை விநாயகர் சன்னதி கட்டும் பணி;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், ஆதிகும்பேசுவரசுவாமி திருக்கோயிலில் 3.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் தெற்கு பகுதியில் உள்ள மொட்டை கோபுரத்தினை ஐந்து நிலை இராஜகோபுரமாக உயர்த்தி கட்டும் பணி; திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயிலில் 2.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆயிரம் கால் மண்டபத்திற்கு ஒளிரூட்டும் பணி; தேனி மாவட்டம், தெப்பம்பட்டி அகோபிலராயப் பெருமாள் திருக்கோயிலில் 2.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் புனரமைக்கும் பணிகள்;

மதுரை மாவட்டம், செல்லூர், திருவாப்புடையார் திருக்கோயிலில் 1.72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரிஷப தீர்த்த குளத்தில் தடுப்பு சுவர் கட்டும் பணி; சிவகங்கை மாவட்டம், தாயமங்கலம், முத்துமாரியம்மன் திருக்கோயிலில் 1.06 கோடி மதிப்பீட்டில் அன்னதான கூடம் கட்டும் பணி; ஈரோடு மாவட்டம், திண்டல், வேலாயுதசுவாமி திருக்கோயிலில் 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருச்சுற்றின் உட்பகுதியில் மங்களூர் ஓடு கொண்டு நிழற்கூரை அமைக்கும் பணி;

ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களை புனரமைக்கும் திட்டத்தின்கீழ், 11.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், சின்ன காஞ்சிபுரம், தேவராஜசுவாமி திருக்கோயில், திருநெல்வேலி மாவட்டம், அத்தாளநல்லூர், அருள்மிகு மூன்றீஸ்வர முடையார் திருக்கோயில் மற்றும் வீரவ நல்லூர், பூமிநாதசுவாமி திருக்கோயில் ஆகிய 3திருக்கோயில்களை புனரமைக்கும் திருப்பணிகள்; என மொத்தம் 175.23 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 22 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

**21 திருக்கோயில்களில் 53 முடிவுற்ற திருப்பணிகள், இணை ஆணையர், உதவி ஆணையர் மற்றும் 10 ஆய்வர் அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல் :**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 68.47 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் குடில்கள் மற்றும் வளாகங்கள், கடல் அரிப்பு தடுப்புச் சுவர், சஷ்டி மண்டபங்கள், பூஜைப் பொருட்கள் விற்பனை அங்காடி, விபூதி மற்றும் பஞ்சாமிர்தம் தயாரிக்கும் கூடங்கள், சுகாதார வளாகங்கள், திருக்கோயில் நுழைவாயில் மற்றும் பசு மடம்; திருள்ளூர் மாவட்டம், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 39.20 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நிர்வாக அலுவலக வளாகம், பக்தர்கள் தங்கும் அறைகள், பூஜைப் பொருட்கள் விற்பனை அங்காடி, முடிகாணிக்கை மண்டபம், சுகாதார வளாகம், விரிவாக்கப்பட்ட அன்னதானக் கூடம், பொங்கல் மண்டபம்; மதுரை மாவட்டம், மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் 35 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதி;

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், பவானி அம்மன் திருக்கோயிலில் 22.60 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள வரிசை மண்டபம்; விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி, மாரியம்மன் திருக்கோயிலில் 17.68 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள திருக்கோயிலுக்கு வரும் வழியில் அர்ச்சுனா ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம், நான்கு சுகாதார வளாகங்கள் மற்றும் குளியலறைகள், திருக்கோயில் உட்பிரகார மற்றும் வெளிபிரகார மண்டபங்களின் கான்கிரீட் தூண்களில் அலங்கார சுதை வேலைபாடுகள், மூன்று நுழைவு தோரணவாயில்கள் மற்றும் கலையரங்கம்; சேலம் மாவட்டம், மேச்சேரி, பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் 4.95 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதி, விருந்து மண்டபம் மற்றும் செயல் அலுவலர் குடியிருப்பு;

மதுரை மாவட்டம், திருப்பரங் குன்றம், சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 4.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சஷ்டி மண்டபம்; 2.92 கோடி ரூபாய் செலவில் கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம், பொதுபஜனை மடத்தில் புனரமைக்கப்பட்ட பஜனை மடம் மற்றும் சென்னை, எழும்பூர். சீனிவாசப் பெருமாள் திருக்கோயில், கோவை மாவட்டம், சூலக்கல், மாரியம்மன் விநாயகர் திருக்கோயில், கள்ளக்குறிச்சி மாவட்டம், ஆதிதிருவரங்கம், அரங்கநாதசுவாமி திருக்கோயில், கடலூர் மாவட்டம், பெருமுளை, முத்தையாசாமி திருக்கோயில் மற்றும் வேலூர் மாவட்டம், விரிஞ்சிபுரம் மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயில் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடங்கள்;

3.32 கோடி ரூபாய் செலவில் திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயிலின் உபகோயில்களான ஆதி அருணாசலேசுவரர் திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம், திருக்குள சுற்றுச்சுவர் மற்றும் குபேர லிங்கம் திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம் மற்றும் திருக்குள சுற்றுச்சுவர்; 3 கோடி ரூபாய் செலவில் கடலூர் மாவட்டம், திருப்பாதிரிப்புலியூரில் கட்டப்பட்டுள்ள மண்டல இணை ஆணையர் அலுவலக கட்டடம்; கடலூர் மாவட்டம், சிதம்பரம், தில்லையம்மன் திருக்கோயிலில் 2.75 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட திருக்குளம்;

தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டை, அருள்மிகு காலபைரவர்சுவாமி திருக்கோயிலில் 1.79 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதி; தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், ஆதிகும்பேசுவரசுவாமி திருக்கோயிலில் 1.79 கோடி ரூபாய் செலவில் திருக்கோயில் கோபுரங்கள் மற்றும் விமானங்கள் இரவு நேரங்களில் பல வண்ணங்களில் ஒளிரும் வகையில் ஒளிரூட்டுதல்; திருவள்ளூர் மாவட்டம், ஆண்டார்குப்பம், பால சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 1.73 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட திருக்குளம்; கரூர் மாவட்டம், தாந்தோன்றிமலையில் 1.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உதவி ஆணையர் அலுவலகம்;

கடலூர் மாவட்டம், திட்டக்குடி, வைத்தியநாதசுவாமி திருக்கோயிலில் 1.28 கோடி ரூபாய் செலவில் புனரமை க்கப்பட்ட திருக்குளம்; 1.20 கோடி ரூபாய் செலவில் சிவகங்கை மாவட்டம், நாச்சியார்புரம், திருப்பத்தூர், தேவகோட்டை, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, திருவாடானை, திரு நெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான், திருநெல்வேலி மேற்கு, இராதாபுரம், திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் மற்றும் பொன்னேரி ஆகிய 10 இடங்களில் கட்டப்பட்டுள்ள சரக ஆய்வாளர் அலுவலகங்கள்; நாகப்பட்டினம் மாவட்டம், தெற்குபொய்கைநல்லூர், சொர்ணபுரீஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் 1.11 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட காய்கறி சந்தை; இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோயிலில் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் ஓய்வுக்கூடம் கைப்பேசி மற்றும் பொருட்கள் வைப்பறை மற்றும் பக்தர்களுக்கான சிற்றுந்து சேவை;

என மொத்தம் 215.79 கோடி ரூபாய் செலவிலான 65 முடிவுற்ற பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் முனைவர் துரை. இரவிச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களின் சகோதரர் சாய் சுந்தர் நேற்று பிற்பகலில் இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் நேரில் சென்று மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். அருகில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், கே.கண்ணன், ஜெ.நடராஜன் ஆகியோர் உள்ளனர்.

# திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சகோதரர் எஸ்.விஸ்வநாதன் (எ) ரவி மறைவு!

## எஸ்.ஜெகத்ரட்சகன் - அமைச்சர்கள் ஆவடி சாமு நாசர் – ஆர். காந்தி அஞ்சலி!

*திருவள்ளூர் பிப் 27:*

*திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் அவர்களின் சகோதரர் விஸ்வநாதன் (எ) ரவி நேற்று 26/02/2026 வியாழன் கிழமை காலை 8 மணி அளவில் இயற்கை எய்தினார் தகவல் அறிந்த கழக கொள்கை பரப்பு செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழும் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சாமு நாசர், கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர். காந்தி, ஆகியோர் அன்னாரின் திருவுருவ உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்*

*இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ.கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திருத்தணி எம். பூபதி, கே.ஜெ.ரமேஷ், மாவட்ட மாநில நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், ஆர். டி. இ. ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், மாஸ்டர் சேகர், டாக்டர் வி.சி.ஆர். குமரன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன் சக்கரவர்த்தி, ப. சிட்டிபாபு, எஸ்.கே. ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணி, ராஜேஷ்வரி ரவீந்திரநாத், ஜி.விமல்வஷன்,*

*ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் வி.வினோத் குமார், ஜி.ரவிந்திரா, ஆர்த்தி ரவி, சி.என்.சண்முகம், பெ.பழனி, என்.கே. கிருஷ்ணன், சி.ஜெ.சீனிவாசன், பி.டி.சந்திரன், கே. ராஜேந்திரன், மா.ரகு, பா. சம்பத்,டி.ஆர்.கே.பாபு, விஜயகுமார், சி.சு.ரவிச்சந்திரன் எஸ்.மகாலிங்கம், கூளூர் எம்.ராஜேந்திரன், மோ. ரமேஷ், கே.ஹரிகிரு ஷ்ணன், தா.மோதிலால், பிரகாஷ்ஞானஒளி, ஆர்.ஜெயசீலன்,*

*மற்றும் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் கிளைக் கழகச் செயலாளர்கள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் பலர் அஞ்சலி செலுத்தினார்கள்.*



தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாநில நிர்வாகிகள் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 23.02.2026 திங்களன்று காலை பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. கழக செய்தித் தொடர்பாளர் அணித் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். பேரவையின் துணைத் தலைவர்கள் போஸ் வெங்கட், எம்.ஆர்.ஆர். வாசு விக்ரம் ஆகியோரும், பேரவைச் செயலாளர்கள் பொள்ளாச்சி மா.உமாபதி, இறையன்பன் குத்தூஸ், பேரவைத் துணைச் செயலாளர்கள் கவிஞர் நன்மாறன், சைதை எம்.எஸ். ஹரிபாபு, ஓசூர் எம்.எஸ்.மாதேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றனர்.


# கண்ணீர் அஞ்சலி



திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச்செயலாளர் – திருத்தணி சட்டமன்ற உறுப்பினர்

## திருத்தணி எஸ்.சந்திரன்

அவர்களின் சகோதரர்

# S.விஸ்வநாதன் (எ) ரவி

(சண்முகம் டெக்ஸ்டைல்ஸ் - உரிமையாளர்)

அவர்கள் **26.02.2026 வியாழக்கிழமை** காலை 08.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து வருந்துகிறோம்.
அன்னாரின் இறுதி ஊர்வலம் **27.02.2026 வெள்ளிக்கிழமை** பகல் 12.00 மணியளவில் திருத்தணி **SBI** வங்கி அருகில் அமைந்துள்ள அவர்களின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து வருந்துகிறோம்.

## திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க